REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

கிராமங்கள் : ஒரு படிப்பிடிப்பு!

இந்தியாவில் இப்போது 5,58,089 கிராமங்கள் இருக்கின்றன; அவைகளில் 29½ கோடி மக்கள் உள்ளனர்; அவர்களுக்கு இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை 5·4 கோடி.

அவைகளில் சுமார் 5 கோடி வீடுகளைச் சீர்படுத்தவோ அல்லது புதுப்பிக்கவோ வேண்டியிருக்கிறதாம்!

அநேக கிராமங்களில் அகலமான தெருக்கள், நல்ல நீர் தாரை வசதி, பள்ளிக்கூடக் கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள், சமுதாய நிலையங்கள் ஆகியவை அமைக்கப்படவேண்டியிருக்கின்றன. இவைகளைச் செய்து முடிப்பதற்கு கோடிக் கணக்கில் பணம் தேவைப்படுமாம்!

மலர் 5] சென்னை : கார்த்திகை 18உ செவ்வாய் (3—12—57) ★ ★ வெளியூர் : கார்த்திகை 19உ புதன் (4—12—57) [இதழ் 147

'மக்களே நேரடியாக பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்'

'மறைமுகத் தேர்தல் முறை கூடாது'

'சட்டத்தை அமுல் நடத்தாதீர்'

மாநிலப் பஞ்சாயத்து யூனியன் மாநாட்டில் வி. கிருட்டினமூர்த்தி தீர்மானம் நிறைவேறியது

சென்னை, டிச. 3—

"பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் முறை இதுவரை இருந்துவந்தது போல, வயதுவந்தவர்களின் ஓட்டுரிமை மூலம் நேரடித் தேர்தல் நடத்தவேண்டும்.

"பஞ்சாயத்து உறுப்பினர்களைக்கொண்டே தலைவர் தேர்தல் நடத்த முடிவு செய்திருப்பதை மீண்டும் புனராலோசனை செய்யவேண்டும்.

"சமீபத்தில் சென்னை சட்டமன்றத்தில் நிறைவேறிய திருந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவராமல் அரசாங்கம் நிறுத்தி வைக்கவேண்டும்"

என்ற தீர்மானத்தை, தென் ஆற்காடு மாவட்ட மேல் குமார மங்கலம் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் திரு. வி. கிருட்டின மூர்த்தி அவர்கள் மாநில பஞ்சாயத்து யூனியன் மாநாட்டில் கொண்டுவந்தார்; பெரும்பாலானவர்களின் ஆதரவுடன் இந்தத் தீர்மானம் நிறைவேறியது.

இந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு. இராசாராம் நாயுடு அவர்கள், இந்தத் தீர்மானத்தை முன்மொழியவிடாமல் தடுத்துவிட முயற்சித்தார் என்றும், இறுதியில் கூடியிருந்த பிரதிநிதிகளில் சுமார் 600 பேர்களின் பலத்த ஆதரவுடன் தீர்மானம் மாநாட்டில் கொண்டுவரப்பட்டது என்றும் தெரியவருகிறது.

தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டவர்கள், மறைமுகத் தேர்தல் முறையை அரசாங்கம் மேற்கொண்டதற்குக் கண்டனம் தெரிவித்தனர்.

நேரடியாக, மக்கள், தலைவரைத் தேர்ந்தெடுப்பதை எல்லோரும் ஆதரித்தனர்.

ஒருசிலர் பேசுகையில் பஞ்சாயத்துச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அரசாங்கம் அதனை அமுல் நடத்தாமல் நிறுத்திவைக்கவேண்டும் என்று வற்புறுத்தினர்.

தங்களின் ஒருமுகமான ஏகோபித்த எதிர்ப்பையும், கண்டனத்தையும் அரசாங்கம் பொருட்படுத்தாமல் பிடிவாதமாக சட்டத்தை அமுல் செய்வதானால், தாங்கள் தீவிர நடவடிக்கை எடுக்கவும், சட்டத்தை மீறவும், தேர்தல் நடைபெறாத முறையில் தடுக்கவும், எதிர்ப்பை, பலவழிகளில் காட்டவும் நேரிடும் என்று எச்சரித்துள்ளனர்.

பஞ்சாயத்துகளைச் சீர்திருத்த முனைந்த அரசாங்கம், பஞ்சாயத்துப் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி செய்திருக்க வேண்டும் என்று, தவறைச் சுட்டிக்காட்டினர்.

உணவு உற்பத்தியே மிக முக்கியம்

புதுடில்லி, டிச. 2—

"இந்தியாவின் உணவு உற்பத்தி கணிசமாக அதிகரிக்க வேண்டியது மிக முக்கியமானதாகும்" என்று, கொழும்புத் திட்ட ஆலோசனைக் குழு கருத்தறிவித்துள்ளது.

"திட்டத்தின் வெற்றி என்பது, நீண்டகால நோக்கில் பார்த்தால், உணவுத் துறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள உற்பத்தி அளவை அடைவதைப் பொறுத்துத்தான் இருக்கும்" என்றும் குழு சுட்டிக்காட்டியிருக்கிறது.

விடுதலை உண்டா, இல்லையா?

'முடிவு காண இறுதிவரை போராடுவோம்'

நாகர் தலைவர் பிஜோ சபதம்

'சரணாகதி அடைய காலம் தாழ்ந்துவிடவில்லை என்கிறார்' கவர்னர்

ஷில்லாங், டிச. 1—

நாகர்களுக்கான புதிய தனி மாநிலம் இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அசாம் மாநிலத்தின் கவர்னரான பாசல்அலி இந்தப் புதிய மாநிலத்தின் நிர்வாகப் பொறுப்பையும், குடியரசுத் தலைவரின் பிரதிநிதி என்ற முறையில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

மாநிலம் அமைந்ததை ஒட்டி வானொலியில் பேசுகையில் பாசல் அலி, 'சர்க்கார் இப்போது, கோஹிமாவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட நாகர் தலைவர்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறது; எனவே, இனி நாகர்கள், இந்த மாநில அமைப்பைப் பயன்படுத்திக்கொண்டு, முன்னேறுவதற்கு வழி காண வேண்டும். இன்னும் ஆயுதந் தாங்கிப் போரிட நினைப்பவர்கள், தங்கள் எண்ணத்தைக் கைவிட்டுவிட வேண்டும்; எல்லோருக்கும் மன்னிப்பு அளிக்க சர்க்கார் தயாராயிருப்பதாக ஏற்கனவே அறிவித்துள்ளோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"சரணாகதி அடைந்துவிட இன்னும் காலந்தாழ்ந்துவிடவில்லை" என்ற அறிவிப்பு வெளிவரும்போதே மற்றொரு செய்தியும் வெளிவந்துள்ளது.

அதுதான்—கடந்த ஆறுமாத காலமாக நோய்வாய்ப்பட்டு, படுக்கையிலிருக்கும் நாகர் தலைவர் பிஜோ தமது விடுதலை இயக்கத்தை—'விடுதலைக் கிளர்ச்சி'யைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்திருப்பதாக அறிவித்திருக்கிறார்—என்ற செய்திதான் அது!

உறுதிபூண்டுள்ளார்

'உண்டு, இல்லை என்பதைக் கடைசிவரை போராடி'ப் பார்த்துவிட அவர் மீண்டும் உறுதிபூண்டிருக்கிறார் என்றும் செய்தி கூறுகிறது.

இரவு பகலாகக் காவல்

படுக்கையிலிருக்கும் தங்கள் தலைவரை தீவிர நாகர்கள் இரவு பகலாகக் காவல் காத்துவருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த அறிவிப்புகள் பற்றி சர்க்கார் வட்டாரம் எதுவும் சொல்ல மறுத்துவிட்டாலும், எந்தவிதக் கிளர்ச்சியையும் அடக்கிவிடத் தயாராக இருப்பதாக மட்டும் கூறியுள்ளதாம்.

பிஜோவின் அறிவிப்பைத் தொடர்ந்து, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், அசாம் போலீசாரும், இராணுவத்தினரும் மீண்டும் அணிவகுக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆந்திராவுக்கு மேலும் ரூ. 5 கோடி கிடைக்குமாம்!

ஐதராபாத், டிச. 3—

"நிதிக் குழு சிபாரிசுகளின் விளைவாக ஆந்திர மாநிலத்திற்கு மேலும் ரூ. 5 கோடி அதிகத் தொகையாகக் கிடைக்கும்" என்று ஆந்திர மாநில நிதி அமைச்சர் கோபால் ரெட்டி தெரிவித்துள்ளார்.

முடிவை நிராகரித்தால் பெரும் போராட்டம்

டெல்லிக்கு மகா குஜராத் பரிஷத் தலைவர் எச்சரிக்கை

பம்பாய் மராட்டியருக்கே என்பது வரலாற்று உண்மை

அதனை பரிஷத் தலைவர் உணர்ந்துள்ளதாக அறிவிப்பு

"இருமொழி பம்பாய் மாநில ஏற்பாட்டிற்குப் பதிலாக, தனித் தனி மொழிவாரி மராட்டிய, குஜராத்தி மாநிலம் காண மகா குஜரத் ஜனதா பரிஷதும், சம்யுக்த மராட்டிய சமிதியும் உருவாக்கித்தரக் கூடிய திட்டத்தினை நிராகரித்தால், இரு இயக்கத்தினரும் கூட்டாகச் சேர்ந்து பெரும் கிளர்ச்சியில் ஈடுபடுபவர்" என்று டெல்லி சர்க்காருக்கு குஜராத் பரிஷத் தலைவரான தினகர்மேதா என்பார் எச்சரிக்கை தந்திருக்கிறார்.

சமிதியும், பரிஷதும் அண்மையில் பூனாவில் சந்தித்து இதுபற்றி விவாதித்ததாகவும், மேலும் முடிவு பற்றி தெளிவு பெற, தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடைபெறும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பம்பாய் மராட்டியருக்குத்தான் என்ற வரலாற்று உண்மையை குஜராத் பரிஷத் உணர்ந்திருக்கிறது என்றும், இதன் அடிப்படையில் பரிஷத், தனி மாநிலத்திற்கான முடிவு காண வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

குஜராத் கம்யூனிஸ்டு கட்சியை சேர்ந்த அவர், பம்பாயை மராட்டியருக்குத் தந்துவிட முயற்சிப்பதாகச் சிலர் கூறுவதை மறுத்துரைத்து, பம்பாயை மராட்டியத்திலிருந்து பிரிக்கமுடியாது என்ற உண்மையை, அகில இந்திய காங்கிரசே, குஜராத் காங்கிரஸ் தலைமையின் சம்மதத்துடன் நடைமுறையில் ஒப்பியிருக்கிறது என்றும், இந்த அடிப்படையிலிருந்துதான் பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

பம்பாய் மராட்டியத்திற்குப் போனாலும் அங்கு வாழும் இதர மொழி சிறுபான்மையினருக்குத் தேவையான பாதுகாப்புகள்பற்றியோசித்து நல்ல ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் அவர் கருத்தறிவித்துள்ளார்.

சமிதி—பரிஷத் சந்திப்பு இந்த மாத இறுதிக்குள் நடைபெறும் என்றும் தெரிய வருகிறது.

ரஷ்ய ராக்கெட்டின் கதி என்ன?

வேறுபட்ட கருத்துக்கள்

லண்டன், டிச. 2—

ரஷ்யாவின் முதல் செயற்கைச் சந்திரனை வான வெளிக்குத் தூக்கிச் சென்ற ராக்கெட் கீழே விழுந்துவிட்டதாக மேற்கு நாடுகள் சில தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் அலாஸ்கா ராஜ்யத்தில் 'பெயர் பாங்க்ஸ்' எனுமிடத்தில் அது எரிந்து விழுந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஆனால், இந்தச் செய்திகளை *ரஷ்யா மறுத்துள்ளது.*

அந்த ராக்கெட் இன்னும் இன்னும் உலகைச் சுற்றிக்கொண்டிருப்பதாகவும், 3-ந் தேதி காலை 6-19 மணிக்கு, ஐதராபாத்தில் *அதைக் காண முடியும் என்றும் மாஸ்கோ வானொலி தெரிவித்துள்ளது.*

தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, ஜப்பான், இங்கிலாந்து முதலிய நாட்டு விஞ்ஞானிகளும், ஒருவருக்கு ஒருவர் மாறுபட்ட கருத்துக்களை இதுபற்றித் தெரிவித்துள்ளனர்.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 3—12—57 செவ்வாய்

தெளிவுபெறட்டும்!

'ஆட்சிமொழியாக இந்தி ஏற்கப்பட்டிருந்தாலும், அரசியல் சட்டம் பிரகடனப்படுத்தப்படும் நாளிலிருந்து பதினைந்தாண்டுக்காலத்திற்கு ஆங்கிலமே தொடர்ந்து எல்லா அரசாங்க அலுவல்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற அரசியல் சட்டத்தின் கட்டளை டெல்லிப் பெரியவர்களால் என்றே மீறப்பட்டுவிட்ட அநியாயத்தைப் பல ஆதாரங்கள் காட்டி விளக்கியிருக்கிறோம்.

'அரசியல் சட்ட விதிப்படி ஆட்சி மொழிக் குழு', 'அதன் அறிக்கையைப் பரிசீலித்து குடியரசுத் தலைவருக்கு யோசனை கூற பாராளுமன்றக் குழு' என்ற—தாங்கள் மேற்கொண்டுவிட்ட நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் நோக்குடையன - சம்பிரதாயத்திற்காகச் செய்யப்படும் கண்துடைப்பு என்ற நமது சந்தேகம் உறுதிப்படவே துணைசெய்வதில் பிரியம்காட்டி வருகின்றனர், சில பெரியவர்கள்; அகில இந்தியக் காங்கிரசின் பொதுச்செயலாளரான ஸ்ரீமன்நாராயணன் கடந்த கிழமை ஐதராபாத் நகரில் தெரிவித்த இந்தி பற்றிய கருத்துக்கள் இதற்குச் சான்றாகும்.

"முடிந்த சீக்கிரத்தில் எல்லா இந்தியர்களும் இந்தி மொழி அறிவு பெற்றுக்கொள்ள வேண்டும்; ஏனெனில்......; இந்தி இப்பொழுது இந்தியாவின் ஆட்சி மொழியாகிவிட்டது" என்று அவர் மிரட்டியிருக்கிறார்—அல்லது, 'அறிவுரை' பகருகிறார்.

'இந்தி இப்பொழுது ஆட்சி மொழியாகிவிட்டது' என்ற தனது கூற்றை மெய்ப்பிக்க அவர், 'இந்திய சர்க்காரின் சர்வதேசக் கடிதத் தொடர்புகள் இந்தியில்தான் நடைபெறுகின்றன; இந்திய—சீனப் பிரதமர்களோ, இந்திய-யூகோ குடியரசுத் தலைவர்களோ வெளியிடும் கூட்டு அறிக்கைகள் இந்தியில் தான் வெளியிடப்படுகின்றன' என்றும் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

நாராயணன் இந்தநாட்டு மக்களின்நன்றிக்குரியவர்;ஏனெனில் 'இந்தி ஆட்சி மொழியாகிவிட்டது; சீக்கிரம் அதனைக் கற்றுக் கொள்ளுங்கள்' என்பது நல்லெண்ணத்தின்பாற் பிறந்த அறிவுரையானாலும், அல்லது, 'என்ன எதிர்த்தாலும் நாங்கள் செய்த முடிவு முடிவானது' என்ற அகங்காரத்தின் அடிப்பிறந்த எச்சரிக்கையானாலும் அந்த வாக்கியம் ஒரு உண்மையின் வரிவடிவம் என்பதால் தான், அவர் நன்றிக்குரியவர் என்கிறோம்.

ஆட்சி மொழிக் குழு நியமிக்கப்படுமுன்பே டெல்லிப் பெரியவர்கள், இந்திதான் ஆட்சி மொழி என்ற முடிவில், அரசியல் சட்ட வரையறைகளையும் எல்லைமீறி, தீவிரமாக இந்தியைத் திணித்து வருகின்றனர் என்ற உண்மை, ஆளும் கட்சியான காங்கிரசின் அகில இந்தியப் பொதுச்செயலாளராலேயே ஒப்பப்பட்ட பிறகு, 'ஆட்சி மொழிக்குழு' 'பரிசீலனைக்கான மக்கள்சபைக் குழு' என்ற ஏற்பாடுகளில் நமக்கு நம்பிக்கை ஏற்படாமற் போவதினால், நாம் குற்றஞ்சாட்டப்பட முடியாது.

'இந்தி விஷயத்தில், இந்தி பேசாத மக்களையும், நம்முடன் அழைத்துச் சென்றாலன்றி, முயற்சி வியர்த்தமாகிவிடும்' என்ற பண்டிதரின் உபதேசம், நாள்பட்டதுதான்; அதனை அவர், சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் புதுப்பிக்கத் தவறியதும் இல்லை; என்றாலும், அது, இந்தி வெறியர்களிடை எந்தவித மனமாற்றத்தையும் ஏற்படுத்த அருகதை பெற்றிருந்தும், ஆற்றல் பெற்றிருக்கவில்லை. மேலும், தென்னாட்டு மக்கள், அவர் போன்றவர்களின் உறுதி மொழியில் நம்பிக்கை வைக்கவும் முடியாமல், சர்க்காரது நடவடிக்கைகள் விரோதமா யிருந்திருக்கின்றன.

எனவே, சில சம்பிரதாயமான ஏற்பாடுகளில் மதிமயங்கி, அவை கூட்டிவரும் தீவிர இந்தித் திணிப்பைக் கண்டு கொண்டு, அதனை முறியடிக்கத் தவறிவிடமாட்டார்கள் தமிழர்கள்—என்று மீண்டும் எச்சரிக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொன்றையும் சொல்வது அவசியம்.

'இந்தி ஆட்சிமொழியாகிவிட்டது' என்று பேசுகிற நாராயணன் போன்றவர்கள், மறுகணமே, 'இந்தி தேசியமொழியாவதை தென்னாட்டில் சிலர் எதிர்க்கிறார்கள்' என்று பேசுவது கண்டு உண்மையில் மிகவும் வருந்துகிறோம்.

'ஆட்சிமொழி' 'தேசிய மொழி'—இந்த இரண்டிற்கு மிடையேயுள்ள பெரும் வேறுபாட்டினை, வார்த்தை ஜாலங்களால் மறைத்துவிடலாம் என்று அவர்கள் கருதினால், அது அவர்களது பேதமையின் அப்பழுக்கற்ற தன்மையையே காட்டும்.

'இந்தியாவிற்கு 14 தேசிய மொழிகள்' என்றும், 'இந்தி ஆட்சிமொழி மட்டுமே' என்றும் அரசியல் சட்டம் கூறுவதை, தங்கள் வெறியில் மறந்துவிடக்கூடாது.

முதலில், இந்தக் குழப்பத்திலிருந்து, நாராயணர்கள் தெளிவு பெறுவது அவர்களுக்கே நல்லது.

மத்திய அரசாங்க ஊழியர்கள் எண்ணிக்கை

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, டிச. 1—

மத்திய அரசாங்க ஊழியர்களில் ரூ. 250-க்கு அதிகமாக ஊதியம் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை 39,104 என்றும், ரூ. 250-க்குக் குறைவாக ஊதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 15,80,243 என்றும் மக்கள் சபையில், நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கிராமத் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி இலவசமாகவே அளிக்கப்பட்டதாம்! இப்பயிற்சிக்காக ஏற்பட்ட செலவு மிகவும் சொற்பமானது தானாம்!

பல்கலைக் கழகங்களில் சர்க்கார் தலையீடு

மானியக் குழுத் தலைவர் தேஷ்முக் கண்டனம்

புதுடில்லி, நவ. 30—

பல்கலைக் கழகங்களின் சுதந்தரத்தில் சர்க்கார் தலையிடுவது பற்றி, மானியக் குழுத் தலைவர் சி. டி. தேஷ்முக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

டெல்லிப் பல்கலைக் கழக 35-வது பட்டமளிப்பு விழாப் பிரசங்கம் நிகழ்த்திய அவர், இது பற்றிக் குறிப்பிட்டுக் கூறியதாவது :—

"ஒரு பல்கலைக் கழகத்தின் முக்கியமான பிரச்சினை எல்லாம்—தனி மனிதனின் உபயோகம் பற்றிய—அதாவது, ஒரு குறிப்பிட்ட வேலைக்கு ஒருவரைத் தயாரிப்பது பற்றியதோ, அல்லது அரசாங்கத்தின் வரையறுக்கப்பட்ட தேவைக்கு ஒப்ப தனி நபரைத் தயாரிப்பதோ மட்டுமல்ல; சமூகத்திற்கு அதன் பொறுப்பு என்ன என்பதை நிர்ணயிப்பதைப் பற்றிய பிரச்சினைதான்.

"அரசு என்பது சமுதாய விருப்பத்தை ஈடேற்றும் ஒரு கருவி; ஆனால், பல்கலைக் கழகம், சமுதாயத்தின் மனச்சாட்சியாயும், உள்ளமாயும் விளங்க வேண்டியதாயிருக்கிறது.

"முழுச் சமுதாயத்தின் பிரதிநிதித்துவத்தை அரசு பெறுகிறபோது, அரசும், சமூகமும் எழுப்பும் கோரிக்கைகள் வேறுபடுவது இயற்கைதான்.

"பல்கலைக் கழகம், அரசு எழுப்புகிற கோரிக்கைகளை நிராகரித்துவிட்டு, சமுதாயம் எழுப்புகிற கோரிக்கைகளை—சர்க்காரின் முரண்பாட்டினைக்கூடப் பொருட்படுத்தாமல் ஏற்றுக்கொள்வதற்கு இயல வேண்டும்."

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஊதியம்

மாநிலங்கள் நிலை என்ன?

புதுடில்லி, நவ. 30—

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துவது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தின் மானியத்தைப் பயன்படுத்துவது பற்றி எட்டு மாநிலங்கள் இதுவரை திட்டம் சமர்ப்பித்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநிலத்திற்கு ரூ. 1,06,000 மானியம் வழங்கப்பட்டுள்ளது.

'சோம்பேறிகள் வெட்கப்பட வேண்டும்'

பண்டிதர் கண்டனம்

சித்வாய்நகர், நவ. 30—

"உடலை வளைத்து ஏதாவது வேலை செய்யாமல் ஒருவன் சாப்பிடுவதற்கு வெட்கப்பட வேண்டும்"

என்று, பண்டிதர் ஆவேசமாகப் பேசியிருக்கிறார்!

பாரத் சேவக் சமாஜ கூட்டத்தில் பேசிய அவர், ஒவ்வொருவரும் தினந்தோறும் சிறிது நேரமேனும், உடலுழைப்புச் செய்யவேண்டும் என்றும், அது, இந்தியாவின் பொருளாதாரமுன்னேற்றத்தில் பெரும் பங்கு பெற முடியும் என்றும் கூறியிருக்கிறார்.

கேட்கும் கடனுக்கு நேரு தரும் மதிப்பு!

"உலகத்தின் மற்ற நாடுகளிடம் இந்தியா கடன்தான் கேட்கிறது—மானியமல்ல! திருப்பிக் கொடுக்கும் சக்தி இந்தியாவுக்கு இருப்பதே, இந்தியப் பொருளாதாரம் வலிவிழந்துவிடவில்லை என்பதைக் காட்டுகிறது"

என்று பண்டித நேரு நிருபர்களிடம் கூறியுள்ளார்.

சுதந்தரத்திற்குப் பின் ஊழல் மலிந்துவிட்டது

டாக்டர் பட்டாபி படப்பிடிப்பு

விஜயவாடா, டிச. 1—

"சுதந்தரத்திற்குப் பிறகு வர்த்தகத் தொழில்களில் மோசடிகளும், பித்தலாட்டங்களும் மலிந்துவிட்டன"

என்று, முன்னாள் மத்தியப் பிரதேசக் கவர்னர் டாக்டர் பட்டாபி சீதாராமையா விஜயவாடா வர்த்தகர் சங்கத்தின் 2-வது ஆண்டுவிழாவில் கூறியுள்ளார்.

ஈவு இரக்கமற்ற சுரண்டல்காரர்களாக வளர்ந்துள்ள வர்த்தக அதிபர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது ஆபத்தானது என்பதை விளக்குகையில் அவர், மேற்குவங்க முதலமைச்சர் வர்த்தகர்களின் ஊழலைத் தடுக்க முயற்சித்ததே அமைச்சரவை கவிழ்ந்ததற்குக் காரணம் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய சர்க்காரின் தாராள உதவி

ஜம்மு—காஷ்மீர் வெள்ள நிவாரண சேதத்திற்காம்!

புதுடில்லி, நவ. 29—

இவ்வாண்டு ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் ஜம்மு—காஷ்மீரில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி அளிப்பதற்காக, இந்திய சர்க்கார், பிரதம மந்திரியின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ. $1\frac{1}{2}$ இலட்சமும், 22,000 டன் அரிசியும், 16,000 டன் கோதுமையும் அம்மாநிலத்திற்கு அளித்தனராம்!

இந்திய மக்கள் பஞ்ச நிவாரண நிதியிலிருந்தும் ரூ. 25,000 அனுமதிக்கப்பட்டது. சென்ற இரண்டு மாத காலத்தில் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் ஏராளமான மருந்து வகைகளையும், 40,000 கலப்பு வைட்டமின் மாத்திரைகளையும், 3,271 உடை வகைகளையும் நன்கொடையாக அளித்திருக்கிறதென மக்கள் சபையில், அமைச்சர் பி. என். தத்தார் கூறியுள்ளார்.

உணர்ந்தபின் கூறுகிறார்!

சித்வாய் நகர், டிச. 1—

"அரசாங்க அதிகாரிகளோ, அல்லது அமைச்சர்களோ, தனியாகத் திட்டத்தை நிறைவேற்றிவிட முடியாது"

என்று பண்டித நேரு கூறி, 'மக்களின் ஒத்துழைப்பு மிகத் தேவை' என்று தெரிவித்துள்ளார்.

தேர்தல் மனுக்கள்

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, நவ. 28—

மாநில சட்டசபைகளுக்கு நடந்த தேர்தல்களில் 13 தேர்தல்களைச் செல்லாதவையென்று தேர்தல் வழக்கு மன்றங்கள் தீர்ப்பளித்திருக்கின்றன; அவை, 1957 நவம்பர் 15-ந் தேதிவரை 105 மனுக்களைப் பைசல் செய்திருக்கின்றன. இன்னும் 351 மனுக்கள் பைசலாக வேண்டியிருக்கின்றன. உயர் நீதிமன்றங்களுக்கு 11 அப்பீல்கள் செய்யப்பட்டுள்ளன; அவைகளில் இரண்டு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன; மீதி இன்னும் பைசலாகவில்லை.

மத்திய மந்திரிகளின் தேர்தல்களை ஆட்சேபித்துக் கொடுக்கப்பட்ட 6 மனுக்களில் இரண்டு பைசலாகிவிட்டன; மாநில மந்திரிகள், துணை மந்திரிகள் தேர்தல்களை ஆட்சேபித்துச் செய்யப்பட்ட 32 மனுக்களில் 15 மனுக்களைத் தேர்தல் வழக்கு மன்றங்கள் பைசல் செய்துள்ளன.

இத்தகவல்களை யூனியன் சட்ட மந்திரி ஏ. கே. சென் மக்கள்சபையில், கேள்விநேரத்தில் தெரிவித்தார்.

'இயந்திரத் தொழிலில் தென்னகத் தொழிலாளர் திறமை வாய்ந்தவர்கள்'

ஏ. இராமசாமி முதலியார் கருத்து

சென்னை, டிச. 1—

"இந்தியாவிலுள்ள முக்கிய தொழிற்சாலைகளைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது, நான் சென்னையிலும், பெங்களூரிலும் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களைக் கண்டேன்.

"இந்தியா முழுவதிலும், தென்னகத்துத் தொழிலாளர்களுக்கு ஈடாக எவரும் இல்லையென்று நான் நம்பிக்கையுடன் கூறுகிறேன்.

"நல்ல சூழ்நிலையை உண்டாக்கி ஊக்கமளித்தால் இந்தியத் தொழிலாளர்கள் — அதிலும் குறிப்பாகத் தென்னாட்டவர், இயந்திரத் தொழிலில் தாங்கள் எவருக்கும் இளைத்தவர்களல்ல என்பதை உறுதிப்படுத்தும் திறமைவாய்ந்தவர்களாக இருப்பார்கள்"

என்று டாக்டர் ஏ. இராமசாமி முதலியார், சென்னை-பெரம்பூர் பகுதியிலுள்ள புகைவண்டி பெட்டி நிர்மாணத் தொழிற்சாலையைப் பார்வையிட்டபின், அதிகாரிகளிடை பேசுகையில் கூறியுள்ளார்.

ரூ. 75 கோடி வர்த்தகப் பாக்கியாம்!

விவரம் தருகிறார் அமைச்சர்

புதுடில்லி, நவ. 30—

மேற்கு ஜெர்மனியுடன் நடத்தப்பட்ட வர்த்தகத்தில் 1956-57-ல் மொத்தம் ரூ. 75 கோடிக்குப் பாதகமான வர்த்தக பாக்கி ஏற்பட்டதென்றும் அது 1955-56-ல் ரூ 45,40,00,000 ஆகவும், அதற்கு முந்திய ஆண்டில் ரூ. $25\frac{1}{2}$ கோடியாகவும் இருந்ததென்றும், துணை அமைச்சர் சதீஷ் சந்திரா, மாநிலங்கள் சபையில் தெரிவித்தார்.

இறக்குமதிகளைக் குறைப்பது, ஏற்றுமதிகளை அதிகரிப்பது பலதரப்பட்ட அடிப்படையில் வெளிநாட்டுவர்த்தகத்தை அபிவிருத்தி செய்வது ஆகிய நடவடிக்கைகள் மூலம் பாதக வர்த்தக பாக்கியைச் சரிக்கட்டிவிட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்!

வேலை தேடுவோர்

எண்ணிக்கை அதிகரிக்கிறது!

புதுடில்லி, நவ. 30—

வேலை தேடித்தரும் நிறுவனத்தில் வேலை கோரி பதிவு செய்தவர்களின் தொகை 1,59,826 லிருந்து 1,60,681 ஆக செப்டம்பரில் அதிகரித்து விட்டதாம்! அம்மாதக் கடைசியில் இன்னும் வேலை கிடைக்காமல் பெயர்ப் பதிவாகியவர்களின் எண்ணிக்கை 8,61,571 என்றும் இது முந்திய மாத இறுதியில் இருந்த எண்ணிக்கையைவிட 32,918 அதிகமென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

அதே மாதத்தில் 16,805 பேருக்கு வேலை தேடித் தரப்பட்டதாம்! 4,422 பேருக்கு மத்திய சர்க்காரிலும், 7,961 பேருக்கு மாநில சர்க்காரிலும், 1,813 பேருக்கு சர்க்கார் சார்புள்ள நிறுவனங்களிலும், மீதிப் பேருக்கு இதரத் தொழில் அதிபர்களிடமும் வேலை தேடித் தரப்பட்டதாம்!

கருவிகள் இல்லாத செயற்கைச் சந்திரன்

மாஸ்கோ, நவ. 30—

"கருவிகள் எதும் உள்ளே வைக்கப்படாத சாதாரண செயற்கைச் சந்திரன்களை 225 மைல் உயரத்தில் பறக்கவிடமுடியும்; அவை பல திங்கள் பூமியை வலம் வரும்" என்று ரஷ்ய விமானப் படை இதழ் கூறுகிறதாம்.

ஏனுதியில் பொதுச்செயலாளர்

மகத்தான வரவேற்பும் மாபெரும் பொதுக்கூட்டமும்

ஏனுதி வரலாற்றிலே கண்டிராத அளவு 15 மைல் சுற்றளவிலிருந்து வந்து பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்தார்கள்.

23—11—57 மாலை 5 மணிக்கு கூட்டம் என்று விளம்பரம் செய்திருந்தும் பொதுச்செயலாளர் அவர்கள் 7 மணி சுமாருக்குத்தான் வரமுடிந்தது என்றாலும் கூட்டம் அமைதியாக அப்படியே பொதுச்செயலாளர் வருகைக்காகக் காத்திருந்தது குறிப்பிடத்தகுந்தது.

தாய்மார்களும், பெரியவர்களும், தோழர்களும் ஏனுதியில் எங்குபார்த்தாலும் ஒரே கூட்டம். கொடிகள் தாங்கிய வெளியூர் சைக்கிள்கள் ஏராளமாக வரிசை வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. எல்லாம் சேர்ந்து ஏனுதியே அன்று விழாக் கோலம் போன்று காட்சியளித்தது.

பொதுச்செயலாளர் அவர்கள் சரியாக $6\frac{1}{2}$ மணிக்கு ஏனுதி வந்து சேர்ந்தார்கள்; சாலையிலிருந்து அவரை வரவேற்று, திறந்த காரில் மேடைக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டது. ஊர்வலத்தில் சுமார் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். 7 மணிக்கு ஊர்வலம் மேடை வந்தடைந்தது.

கூட்டத்திற்கு, தோழர் அ. சிதம்பரம் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் பேச எழுந்ததும், பல வெளியூர் கழகங்களிலிருந்தும் தனிப்பட்ட படிப்பகங்களின் சார்பாகவும், தனிப்பட்ட நபர்களின் சார்பாகவும் ஏராளமான மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் பேச ஆரம்பித்த நெடுஞ்செழியன் அவர்கள், ஆட்சியாளர்களின் போக்கை விளக்கியும், தி. மு. க. சட்டசபையில் என்ன செய்கிறது என்பதுபற்றியும் இந்தி கூடாது என்பதற்கான காரணங்களை விளக்கியும், மற்றும் சமுதாயப் பிரச்சினைகள்பற்றியும் கடவுள் பிரச்சினை குறித்தும் விரிவுரையாற்றினார்.

கூட்டத்தில் தோழர் மு. வீரையனின் ஆண் குழந்தைக்கு பொதுச்செயலாளர் அவர்களால் 'செங்குட்டுவன்' என்றும், பெண் குழந்தை ஒன்றுக்கு 'பூங்கொடி' என்றும் பெயரிடப்பட்டது.

கொள்ளத் தவறிவிட்டார்கள். மக்கள் மதிக்கும் காரியங்களைத் தலைவர்கள் நிறைவேற்றத் தவறிவிட்டார்கள்; அதனால்தான் தலைவர் மதிக்கும் காங்கிரசை மக்கள் மதிக்கவில்லை. மொரார்ஜி தேசாயை நேரு தாங்கிவைத்ததையும், சங்கரலிங்கனார் இறந்துபட்டதையும் மக்கள் மறந்துவிடவில்லை."

தோழர் ஜோசப் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

தூத்துக்குடியில் தி. மு. கழகக் கூட்டம்

தென்னரசு கலந்துகொண்டார்

தூத்துக்குடி தி. மு. கழகச் சார்பில், 17—11—57 மாலை 6-30 மணிக்கு, வடக்கூர் தி. மு. கழகத்தின் முன்பாக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டம் திடீரென ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

தோழர் எம். எஸ். சிவசாமி கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்; காங்கிரஸ் சர்க்கார் சாதியை ஒழிப்பதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அடுத்து தோழர் கே. ஆர். பி. மணிமொழியன், இந்திய அரசியலாரின் ஐந்தாண்டுத் திட்டத்தையும், சென்னை மந்திரிகளின் அர்த்தமற்ற பேச்சுக்களையும் கண்டித்துப் பேசினார்.

இறுதியாகத் தோழர் எஸ். எஸ் தென்னரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரஸ் கரைந்துகொண்டேவருகிறது என்று காங்கிரஸ் தலைவர்களே கூறுகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை அவர்கள் தெரிந்து

சேலம் 18-வது வட்ட தி.மு.க. பொதுக்கூட்டம்

டி. கே. தாமரைச்செல்வன் கலந்துகொண்டார்

சேலம் 18-வது வட்டத்தில் 24—11—57 மாலை தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஒன்று தோழர் பி. எஸ். அம்பாயிரம் தலைமையில் நடைபெற்றது.

தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கி வழக்கறிஞர் வி. சிவப்பிரகாசம் பேசினார்.

சென்னை அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது கம்யூனிஸ்டுகள் நடந்துகொண்ட முறையையும், அனாவசியமாக தி. மு. கழகத்தின்மீது கம்யூனிஸ்டுகள் குறைகூறுவதைக் கண்டித்தும் சிற்றுளி எ. சுப்பிரமணியம் பேசினார்.

அடுத்து, தோழர் டி. கே. தாமரைச்செல்வன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தி. மு. கழகம் சட்டசபையில் எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். பார்லிமெண்டு முறை தவறாமல் நடந்துகொண்டு வருகிறது. தி. மு. கழகத்தை அண்ணா அவர்கள் சட்டசபையில் எவ்வாறு திறமையாக நடத்திச் செல்கிறார்கள் என்பதை பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்துகொண்டிருப்பீர்கள்.

"சென்னை அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபொழுது தி. மு. கழகத்தினர் வோட்டெடுப்பில் கலந்துகொள்ளாததை கம்யூனிஸ்டுகள் குறைகூறிப் பேசுகிறார்கள். தி. மு. கழகம் ஏன் வோட்டெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்பதைக் குறித்து அண்ணா அவர்கள் விவரமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

"தி. மு. கழகம் வெகுவேகமாக வளர்ந்து வருவதைக் கண்டு மாற்றுக் கட்சியினர் அதிர்ச்சியடைகிறார்கள். கட்டுப்பாட்டுடனும், கண்ணியத்துடனும் வளர்ந்துவரும் தி. மு. கழகத்தை நீங்கள் ஆதரித்து இன்னும் பலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

தோழர் எஸ். ஏ. அன்புக்கரசு மற்றும் பலரும் பேசினர். (ந-தி.)

தென்பகுதி இரயில்வே பகுத்தறிவாளர் மன்றம்

பொன்மலை-துணைக்குழு அமைப்பு

27—11—57 மாலை பொன்மலைப்பட்டி தமிழ் மன்ற அலுவலகத்தில், 'தென்பகுதி இரயில்வே பகுத்தறிவாளர் மன்றம்—பொன்மலை துணைக் குழு' அமைப்புக் கூட்டம், மத்திய குழு உறுப்பினர் தோழர் பொன். பரமசிவம் தலைமையில் நடைபெற்றபோது, கீழ்க்கண்ட துணைக் குழு அமைக்கப்பட்டது.

துணைக் குழு உறுப்பினர்கள்:- இ. அப்பாத்துரை, மு. நடராசன், டி. ஆர். கோவிந்தராசன், ஏ. சுந்தரம், ஏ. தசரதராசன், இரா. க. வெங்கடேசன், சி. கன்னையன்; துணைக் குழுத் தலைவர்: மு. நடராசன்; செயலாளர்: சி. கன்னையன்.

தோழர் ஜி. பாலங்குசம் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

தொழிற் சங்கங்களில் தி. மு. கழகப் பணி

தொழிலாளர்கள் பெறும் நற்பலன்கள்

புதுக்கோட்டை, நவ. 30—

புதுக்கோட்டையில் தி. மு. க. உறுப்பினர்கள், ஆதரவாளர்களான தொழிலாளர்களால், 'அச்சுத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்' கடந்த ஓராண்டுக்காலமாக திருச்சி தோழர் எம். எஸ். மணி தலைமையில் திறமையுடன், சுமார் 100 உறுப்பினர்களுடன் நடந்துவருகிறது. இந்தச் சங்கத்திற்கு போட்டியாக பொதுவுடைமைத் தோழர்களால் ஒரு சங்கம் ஏறக்குறைய 30 தொழிலாளர்களுடன்கூட நடத்தப்பட்டுவருகிறது.

போனஸ் சம்பந்தமாக நகரிலுள்ள எல்லா அச்சக நிர்வாகிகளும், நமது சங்கத்தின் முயற்சியின் விளைவாக, ஒரு மாத போனஸ் தொழிலாளிகளுக்குத் தருவது என்று முடிவு செய்து அதன்படி தந்தார்கள்; ஆனால், 'கண்ணபிரான் அச்சக' முதலாளி மட்டும் தனது அச்சகத்தை மூடஇருப்பதால், தொழிலாளிகளுக்கு போனஸ் கிடையாதெனவும், மூடுவதற்கு முன்னால் நஷ்டஈடும் தரமுடியாதெனவும் கூறிப் பிடிவாதம் பிடித்ததோடு, 'சங்கத்தால் முடிந்தால் வாங்கிப் பார்க்கட்டும்' என்று பிடிவாதமாகப் பேசினார். முன்னேற்ற சங்க நிர்வாகிகள் உடனே நடவடிக்கைகள் எடுத்து விளம்பரப்படுத்திவிட்டதால் அச்சக முதலாளி, சமரசம் பேச சம்மதித்தார்; உடனே தோழர் எம். எஸ். மணி அவர்கள் முதலாளியிடம் வந்து பேசி, போனசாக ஒரு மாதச் சம்பளமும், அச்சகத்தை மூடுவதால் நஷ்டஈடாக அரை மாதச் சம்பளமும் பெற்றுத் தந்தார்; தொழிலாளர்களும் பெருந்தன்மையுடன். 'கிராஜுயுட்டி' மற்றும் உள்ளவைகளை— முதலாளியும் அதிக நஷ்டமடைந்துவிட்டார் என்று உணர்ந்து—கேட்காமல் விட்டுக் கொடுத்தார்கள்.

தி. மு. கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்களால் புதுக்கோட்டை நகரில் 'மோட்டார் போக்குவரத்து பொதுத் தொழிலாளர் சங்கம்' சுமார் 300 (மோட்டார் தொழிலாளர்கள்) உறுப்பினர்களுடன், கடந்த ஓராண்டுக்காலமாக நடந்துவருகிறது; தொழிலாளரின் நலனுக்காகப் பாடுபட்டு பல வெற்றிகளைத் தேடிக் கொடுத்திருக்கிறது.

சமீபத்தில், 'எஸ். ஆர். அவுட் ஏஜன்சி'யில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அரசாங்க உத்தரவுப்படி சம்பளம் முதலியவை இதுவரை கொடுக்காமல் இருந்துவந்ததை எதிர்த்து, நம் சங்கத்தின் சார்பாக வழக்காடி வெற்றிபெற்று இப்பொழுது அரசாங்க உத்தரவுப்படி சம்பளம் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

'இராஜாமணி டிரான்ஸ்போர்ட்' என்ற பெரிய பஸ் கம்பெனி முதலாளி, தொழிலாளர்களுக்குச் செய்யும் பல கொடுமைகளிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் தொழிலாளர்கள் மீள எட்டுக் கோரிக்கைகளடங்கிய ஒரு மகஜர் அனுப்பப்பட்டிருக்கிறது; அந்த வழக்கு அடுத்த மாதம் நடக்கவிருக்கிறது.

மேற்படி கம்பெனி, ஒரு மாத போனஸ் தர ஒப்புக்கொண்டாலும்கூட, நிரந்தரமான தொழிலாளிகளுக்கு மட்டும்தான் போனஸ் தரப்படும் என்றும், ஏராளமான சாதாரணத் தொழிலாளிகளுக்குக் கிடையாது என்றும் கூறி மறுத்தபோது, சங்கம் வழக்குத் தொடர்ந்து போராடி, எல்லோருக்கும் ஒரு மாத போனஸ் வாங்கிக் கொடுத்து வெற்றிபெற்றிருக்கிறது.

கோபியில் தி.மு.க. பொதுக்கூட்டம்

மு. கருணாநிதி கலந்துகொண்டார்

29—11—57 மாலை 6 மணிக்கு கோபி-பெரியார் திடலில், தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் கா. பெ. துரை தலைமையில் நடைபெற்றது.

தோழர் ஜி. என். இராசு சிறிதுநேரம் பேசியபின் தோழர் மு. கருணாநிதி எம். எல். ஏ., அவர்கள் சட்டசபை நடவடிக்கைகள் குறித்தும், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போதும், தேசிய கௌரவப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேறிய போதும் கழகம் மேற்கொண்ட முறை பற்றியும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் திராவிட மக்கள் வீட்டுக்கொருவர் ஆயத்தமாகி ஈடுபட வேண்டிய அவசியம் குறித்தும் விரிவுரையாற்றினார்.

தோழர் கருணாநிதி அவர்களுக்கு பல்வேறு கழகங்களின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

சுந்தரபெருமாள் கோயில் தி.மு.க. கிளை துவக்கவிழா

அப்பாதுரை கலந்துகொண்டார்

24—11—57-ல், சுந்தரப்பெருமாள் கோயிலில், தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் சி. கலியபெருமாள் தலைமை தாங்கினார். பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, தோழியர் அலமேலு-அப்பாதுரை ஆகியோர் கழகக் கருத்தினை விளக்க முற எடுத்துரைத்துப் பேசினர். சென்ற பொதுத் தேர்தலின் போது நமது கழகத்திற்கெனவே இடையீடின்றி பாடுபட்டு, இன்று நம்மிடையே இல்லாத நிலைபெற்ற இளைஞர் மா. இரத்தினம் அவர்களின் நினைவாக 'இரத்தினம் அரங்கு' என மேடைக்குப் பெயரிடப்பட்டு நன்றி செலுத்தப்பட்டது. தோழர் முத்து அரங்கம் நன்றி நவின்றார்.

பீடித் தொழிலாளர் நலன்களுக்கான மசோதா ஜனவரியில் வரும்

விரைவில் கூலி நிர்ணயக் குழுவும் அமைக்கப்படும்

சேலம் பீடித் தொழிலாளர் மாநாட்டில் தொழில் அமைச்சர் உறுதிமொழி

சேலம், டிச. 2—

சேலம் மாவட்ட பீடித்தொழிலாளர் மாநாடு சேலத்தில் 1—12—57-ல் தோழர் எம். கல்யாணசுந்தரம் எம்.எல்ஏ. தலைமையில் நடைபெற்றது.

சென்னை, திருச்சி, வடஆர்காடு, கோவை முதலிய பல பகுதிகளிலிருந்தும் மாநாட்டிற்குப் பிரதிநிதிகள் வந்திருந்தனர். மாநாட்டை அமைச்சர் வெங்கட்ராமன் துவக்கிவைத்தார். தொழிலாளர் கொடியை வி. கோதண்டராமன் எம்.எல்.ஏ. ஏற்றிவைத்து அரசியல் சார்பற்ற முறையில் மாநாடு நடப்பதாகக் கூறினர்.

வரவேற்புக்குழுத் தலைவர் எஸ். எஸ். மகாதேவ முதலியார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சென்னை தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் குறிப்பிட்டதாவது:—

பீடித் தொழில் வரையறுக்கப்படாததாக உள்ளது; அதனால் தான் இதுவரை பீடித் தொழிலுக்குச் சட்டம் கொண்டு வரவில்லை. முதலாளிகள், குத்தகைக்காரர்கள், மானேஜர்கள் முதலியவர்களை முதலாளிகள் என்ற அடிப்படையில் சட்டம் கொண்டுவர வேண்டியுள்ளது.

"பீடி இலையை வீட்டிற்குக் கொண்டு சென்று பீடி சுற்ற பெண்களுக்கு மாத்திரம் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்படும்.

"ஜனவரி மாதத்தில் சென்னை சட்டசபையில் பீடித் தொழிலாளர் மசோதா விவாதிக்கப்பட்டு சட்டமாக்கப்படும். மசோதாவில் உங்களுக்குக் குறைகள் இருந்தால் தெரிவியுங்கள்; அவை பரிசீலனை செய்யப்படும்.

"பீடி, புகையிலை, சுருட்டு ஆகிய தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் கூலியை நிர்ணயம் செய்ய ஒரு கூலி நிர்ணய போர்டை அரசாங்கம் சீக்கிரத்தில் ஏற்படுத்தப் போகிறது.

"பீடித் தொழில் நடத்தும் முதலாளிகள், தொழிற்சாலையை மூடிவிட்டால் மீண்டும் அந்தத் தொழிலை நடத்த அவர்களுக்கு அரசாங்கம் சுலபத்தில் அனுமதி கொடுக்கமாட்டார்கள். தொழிலாளிகளும் அடிக்கடி வேலைநிறுத்தம் செய்யக்கூடாது. முதலாளிகளும்— தொழிலாளிகளும் தங்கள் பிரச்சினைகளை, பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

தீர்மானங்கள்

பீடித் தொழில் சட்டத்தை உடனே கொண்டு வருமாறும், பீடித் தொழிலாளர் கூலி நிர்ணய போர்டில் சேலம் ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்கத்திற்கு பிரதிநிதித்வம் வழங்குமாறும், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்துமாறும். நியாய விலைக் கடைகள் திறந்து எல்லோருக்கும் குறைவான விலையில் உணவு தானியங்கள் கிடைக்க வழி செய்யுமாறும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேறின.

கோவை, மதுக்கரை பிர்க்கா தாழ்தப்பட்ட மக்களுக்கு நிதி உதவி

கோவை, நவ. 30—

கோவை, மதுக்கரை பிர்க்காக்களில் குடியிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மானியமளிக்க அரசாங்கம் ரூ. 28,500 ஒதுக்கியுள்ளதாம்.

எருதுகள் வாங்க ரூ. 240-ம், விவசாயக் கருவிகள் வாங்க ரூ. 25-ம், விதைகள் வாங்க ரூ. 10-ம் ஆகமொத்தம் தலைக்கு ரூ. 275 அளிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்த உதவியைப்பெற விரும்புவோர் கோவை தாசில்தாருக்கு டிச. 7-ந் தேதிக்குள் மனுச் செய்யவேண்டுமாம்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்நிறுவ அனுமதி

தமிழகத்திற்குக் கிடைத்ததா?

புதுடில்லி, நவ, 30—

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்காக இதுவரையில் 39 லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றனவாம்!

'இவைகளில், எட்டு ஆலைகள் ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கிவிட்டன; வேறு நான்கு ஆலைகளில் நிர்மாண வேலைகள் பூர்த்தியாகி விட்டன; இவை 1957—58-ம் பருவ காலத்தில் உற்பத்தியைத் துவக்கும்; என்று, மக்கள்சபையில் கூறப்பட்டிருக்கிறது.

இவை தவிர ஆலைகளில் இயந்திரங்கள் நிறுவும் வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டனவாம்!

கொழும்பு நகர சபை கலைக்கப்பட்டது

வேலைநிறுத்தத்தின் எதிரொலி

கொழும்பு, டிச. 3—

கொழும்பு நகரசபை ஊழியர்களின் வேலைநிறுத்தத்தின் விளைவாக நகரத்தின் அவசிய வேலைகளை இராணுவத்தினர் கவனித்து வருகின்றனர்.

இந்த நகர சபையின் நிர்வகத்தை பெருவாரியான ஆதரவு பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியினர் நடத்தி வருகின்றனர்.

நிர்வாகத்தை நடத்துவதற்குத் தகுதியில்லை என்ற காரணம் காட்டி 30 உறுப்பினர்கள் அடங்கியுள்ள கொழும்பு நகரசபையை அரசாங்கம் கலைத்துவிட்டது. நகரசபையின் ஆணையாளர் திரு. பி. ஏ. ஜெய்சிங் அவர்களிடம் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

7,500 நகரசபை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள காரணத்தினால் மிகவும் அவசியமான வசதிகளைக்கூட பொது மக்களுக்குச் செய்து தருவதற்கு இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின் விளைவாக 20 உணவுக் கப்பல்கள் துறைமுகத்தில் தங்கியிருப்பதன் காரணமாக இலங்கையில் உணவுப் பஞ்சம் ஏற்படக் கூடிய விபரீத நிலையை, இலங்கை அமைச்சரவையின் தற்காலிகத் தலைவர் உணர்த்தியதும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த 10,000 தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பிவிட்டனரெனக் கூறப்பட்டிருக்கிறது.

தஞ்சையில் அரிசி கொள்முதல்

திட்டத்தைக் கைவிட கேரள சர்க்கார் முடிவு

திருவனந்தபுரம், டிச. 2—

டிசம்பர் திங்களுக்குப் பிறகும் கேரளத்திற்கு அரிசி தர டெல்லி சர்க்கார் சம்மதித்துள்ளார்களாம்!

இத்தகவலை, மாநில உணவு மந்திரி கே. சி. ஜார்ஜ் தெரிவித்திருக்கிறார்.

கேரளத்திற்கு இப்போது மாதம் 10 ஆயிரம் டன் அரிசி டெல்லி சர்க்கார் தருவதாகவும் ஆனால் இந்த அளவு டிசம்பருக்குப் பிறகு குறைவாக இருக்கலாம் என்றும் டெல்லி சென்று திரும்பிய அவர் கூறியிருக்கிறார்.

தஞ்சையிலிருந்து 10 ஆயிரம் டன் அரிசி கொள்முதல் செய்வது என்ற திட்டத்தை மத்திய சர்க்காரின் யோசனையின் பேரில் தாங்கள் கைவிட்டுவிட்டதாகவும், இதற்கென அங்கு சென்றிருந்த சர்க்கார் அதிகாரி திரும்பிவிட்டதாகவும், ஆனாலும், 10 ஆயிரம் டன் அரிசிக்காக தஞ்சையில் ஒரு வியாபாரியுடன் ஒப்பந்தம் ஏற்கனவே பூர்த்தியாகிவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் 5 மார்க்கங்களில் சர்க்கார் பஸ்கள்!

சென்னை, டிச. 1—

சென்னை அரசாங்கம், பஸ் போக்குவரத்தை ஏற்று நடத்தும் திட்டத்தை விரிவாக்க முடிவு செய்துள்ளது.

சென்னை காஞ்சீபுரம், சென்னை—புழலேரி, பிராட்வே—வில்லிவாக்கம், தங்கசாலை—திருவொற்றியூர்—எண்ணூர், சென்னை பலகை வாராவதி ஆகிய வழிகளில் இப்போது தனியார் பஸ்கள் ஓடுகின்றன. அவர்களுக்கு வேறு 'ரூட்'களைக் கொடுத்துவிட்டு, இந்த வழிகளில் அரசாங்கமே பஸ்களை ஓட்டும் என்று தெரியவருகிறது.

மத்தியப் பிரதேசத்தில் கொலை—கொள்ளைகள்

புள்ளிவிவரம் தருகிறார் மாநில முதலமைச்சர்

போபால், நவ. 30—

இந்த ஆண்டு ஜுலை முதல் தேதியிலிருந்து நவம்பர் இரண்டாந் தேதிவரையில், மத்தியப் பிரதேச மாநிலத்தில் 395 கொலைகள், 114 கொள்ளைகள், 13 கடத்தல் வழக்குகள் நடைபெற்றுள்ளனவாம்.

24 கொள்ளையர் கொல்லப்பட்டனராம்; ரூ. 1,31,711 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டனவாம். இரண்டு போலீசார் இறந்துவிட நேர்ந்ததாம்.

மத்தியப் பிரதேச முதலமைச்சர் கட்ஜு இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகர்ணோவைக் கொல்ல முயற்சி

ஜகார்தாவில் பலர் கைது

ஜகார்தா, டிச. 2—

கடந்த சனியன்று, இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சுகர்ணோவைக் கொல்லுவதற்கு முயற்சிக்கப்பட்டதை ஒட்டி எண்ணற்றோர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

சுகர்ணோ தமது இரு குழந்தைகளுடன் ஒரு பள்ளிக்கூட தோட்ட விருந்தில் கலந்துகொண்டுவிட்டு தமது காரில் ஏறச் செல்லும்போது, யாரோ சில நாட்டு வெடிகுண்டுகளை அவர்மீது வீசினர் என்றும், உடனிருந்த போலீஸ் அதிகாரி சுகர்ணோவின் முன் பாய்ந்து அவரைக் காப்பாற்றினர் என்றும், இந்தச் சம்பவத்தின்போது ஐந்து குழந்தைகளும் ஒரு போலீஸ்காரரும் கொல்லப்பட்டனர் 46 குழந்தைகள் காயம்பட்டனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்தும், சுகர்ணோ தப்பித்ததில் மகிழ்ச்சி தெரிவித்தும் பண்டித நேரு ஒரு செய்தி அறிவித்திருக்கிறார்.

ரூ. 30 கோடி கடன்

புதுடில்லி, டிச. 1—

இந்திய அரசாங்கம் ரூ. 30 கோடிக்கு கடன் எழுப்ப முடிவு செய்துள்ளது. இது $3\frac{1}{4}$ சதவிகித வட்டியுடன் 1962-ல் திருப்பித் தரப்படும்.

கழகக் கூட்டம்

★

குன்றத்தூர் :

4—12—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : டி. இராசரத்தினம்

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு
சத்தியவாணி-முத்து
தி. ந. சம்பந்தம்

செஞ்சிலுவைச் சங்கப் பிரசார—நிதி திரட்டும் இயக்கம்

அண்ணு துவக்கிவைப்பார்

4—12—57 மாலை 5-45 மணி அளவில், சென்னை—பூங்காநகர், மெமோரியல் மண்டபத்தில், இந்திய செஞ்சிலுவைச் சங்க—சென்னை மாநிலக் கிளையின் நிதி திரட்டும் குழுச் சார்பில், செஞ்சிலுவைச் சங்க பிரசார—நிதி திரட்டும் இயக்கத்தை அண்ணு அவர்கள் துவக்கிவைப்பார்கள். திரு. சி. பி. இராமசாமி(அய்யர்) விழாவுக்குத் தலைமை வகிப்பார். திரு. எஸ். அனந்தராமகிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

சென்னை 4-வது வட்ட இளங்கோ கலைமன்ற செயற்குழு உறுப்பினர்களுக்கு :

4—12—57 இரவு 7 மணிக்கு, சென்னை 4-வது வட்ட (வண்ணையம்பதி) இளங்கோ கலைமன்றத்தின் செயற்குழுக் கூட்டம் மன்றப் பணிமனையில் நடைபெறும்.

திருக்குறள் வகுப்பு

4—12—57 மாலை 6-30 மணி அளவில், பெத்துநாய்க்கன் பேட்டை, முருகேச முதலித் தெரு, 2-ம் எண்ணுள்ள கட்டடத்தில், மணவழகர் மன்றச் சார்பில் 'திருக்குறள் வகுப்பு' புலவர் திரு. கா. கி. தனக்கோட்டி அவர்களால் நடத்தப்பெறும்.

உள்ளே வராதே!

டச்சுக்காரருக்கு இந்தோனேஷிய சர்க்கார் தடை

ராட்டர்டாம், டிச. 2—

இந்தோனேஷியாவிற்குள் டச்சுக்காரர் எவரும் நுழையக் கூடாது என சர்க்கார் உத்தரவிட்டிருப்பதாக இங்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

டச்சுப் பிரசுரங்களையும், சினிமாப் படங்களையும் இந்தோனேஷிய சர்க்கார் தடை செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

'மேற்கு இரியா' என்ற டச்சு நியூகினியா இந்தோனேஷியாவிற்குச் சொந்தமானது என்றும், அது இப்போது டச்சுக்காரரின் பிடியில் இருக்கிறது என்றும், அது தங்களுக்குச் சேரவேண்டுமென்றும் கூறி, அதற்காகத் தங்களுடன் ஹாலந்து சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்த சிபாரிசு செய்யவேண்டுமென ஐ. நா.-வில் இந்தோனேஷிய சர்க்கார் எழுப்பிய கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்றும், அதன் விளைவாக, டச்சுக்காரருக்குச் சொந்தமான நிறுவனங்களில் வேலை செய்வோர் எல்லாம் வேலைநிறுத்தம் செய்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இந்திவெறியர்கள் ஆர்ப்பாட்டம்

அம்பாலா, டிச. 3—

இன்று லூதியானாவில் இந்திவெறியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தும், கண்ணீர்ப் புகையை உபயோகித்தும் கலைத்துள்ளனர். 38 இந்திவெறியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேரில் ஆங்கிலம் கற்பிப்பதற்கெனப் பிரத்தியேகமாக சென்னையில் ஏற்பட்டிருக்கிற மாபெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே — மண்ணடி — சென்னை-1.

★

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

அடிப்படையிலிருந்து இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

காலையிலோ மாலையிலோ ஒரு மணி நேரம் வகுப்பிற்கு வந்தால் போதுமானது

நாட்டின் உயிர்நிலையாய கல்வித் துறையில் பயனுள்ள நூதனமான - புரட்சிகரமான மாற்றங்களைச் செய்துவரும் எங்கள் கலாநிலைய நடவடிக்கைகளை நேரடியாகப் பார்வையிட்டால் எங்கள் அரிய சேவையைப் பாராட்டாமல் இருக்கமாட்டீர்கள்.

புதிய வகுப்புகள் ஆரம்பம்: 10-12-57

வகுப்பில் சேர மனு செய்துகொள்ள கடைசி தேதி: 9—12—57

★ கற்றோரும் போற்றும் நூதன பாடத் திட்டங்கள்.
★ சீரிய முறையில் அமைக்கப்பட்டிருக்கும் வகுப்புகளின் காட்சி.
★ உரிய மரியாதையுடன் மாணவர்கள் நடத்தப்படும் போக்கு.
★ மாணவர்கள் காட்டும் ஆர்வம்.

நேரிலே காணீர்!

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

கல்வி நிலையம் எல்லா நேரங்களிலும் திறந்திருக்கும்.

முக்கிய அறிவிப்பு: 16 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.